<u>தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் படி தகவல் கோரும் மனு</u>


அனுப்புநர்

P. முத்துசாமி
S/o C. பரமசிவம்,
59, அய்யநாதவுண்டன்பாளையம்,
எழுமாத்தூர் (P.O)
மொடக்குறிச்சி (T.K)
ஈரோடு - 638104.
Cell: 9790008998.


பெறுநர்

பொது தகவல் அலுவலர் மற்றும்
துணை பொது மேலாளர்,
Power Grid Corporation of India Ltd,
கே.ஆர். தோப்பூர், தாரமங்கலம் ஸ்டீல் பிளேண்ட் ரோடு,
டி.கூனக்காபாடி (அஞ்சல்),
சேலம் - 636502.

ஐயா,

பொருள்: தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் படி ஈரோடு மாவட்டத்தில் பவர் கிரிட் நிறுவனம் மூலம் அமைக்கப்பட்டுள்ள ராய்கர் - புகலூர் 800KVA உயர் அழுத்த மின்பாதை பற்றிய தகவல்கள் கோருவது சம்பந்தமாக.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். எனக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் படி மனு கட்டணமாக ரூ.10/-க்கு indian postal order இணைத்துள்ளேன். நான் கீழ்கண்டவாறு கோரியுள்ள தகவல்களை உரிய சான்றுடன் வழங்க வேண்டுகிறேன். சான்றிட்ட ஒளி நகல்கள் (Photocopies) எடுக்க வேண்டிய செலவுத் தொகையை தாங்கள் தெரிவித்தவுடன் செலுத்த சம்மதிக்கிறேன். ஒளி நகல் செலவுத் தொகை செலுத்த வேண்டிய வங்கி கணக்கு எண் தெரிவிக்கவும்.

| வ.எண் | கோரப்பட்டுள்ள விபரம் |
|---|---|
| 1. | பவர்கிரிட் நிறுவனம் (Power Grid Corporation Of India Ltd) பொது மேலாளர், துணை பொது மேலாளர் சங்ககிரி ஆகியோர்களின் ஈரோடு மாவட்டத்தில் ராய்கர், புகலூர் உயர்மின் அழுத்த பாதை 800KVA அமைக்க 01.03.2019 முதல் 31.03.2019 வரையிலான Power Grid அலுவல் சார்ந்த பயண பட்டியல் பதிவேடு (Official movement register copy (நகல் வழங்கவும்) |
| 2. | பவர்கிரிட் நிறுவனத்தின் பிரதான ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் என்ன? வழங்கப்பட்ட ஒப்பந்த மதிப்பு தொகை அளவு எவ்வளவு? அந்த பிரதான நிறுவனத்தின் கீழ் பணியமர்த்தப்பட்ட துணை ஒப்பந்ததாரர் (Sub contractor) பட்டியல் முகவரியுடன் வழங்கவும். ஒவ்வொரு துணை ஒப்பந்ததாரரின் (Contract value) ஒப்பந்த மதிப்பு பட்டியல் வழங்கவும். |
| 3. | ஈரோடு மாவட்டத்தில் பவர்கிரிட் நிறுவனம் மூலம் 800 KVA உயர் மின்பாதை ராய்கர் முதல் புகலூர் வழிபாதையில் ஈரோடு மாவட்டத்தில் அமைக்க பிரதான ஒப்பந்ததாரர் செய்த பணிக்காக வழங்கிய மொத்த விலை பட்டியல் (Total bill abstract item wise) இனம் வாரியாக வழங்கவும். |


पावरग्रिड, सेलम
POWERGRID, SALEM
सं. / No 748 दि. / Dt 21.12.22
उप केन्द्र/SS | टी.एल.एम/TLM
एम.आर.टी/MRT | सि.& एम/C&M
अनु. / MTC | मा.सं. / HR | प्रच / Opm

1477

37
13/01/23

| | |
|---|---|
| 4. | பவர்கிரிட் நிறுவனம் மூலம் 800 KVA (HVDC) உயர் மின்அழுத்த மின்பாதை ராய்கர் முதல் புகலூர் வழிபாதை அமைக்கும் முன் நிலநடுக்க பாதிப்பு ஆய்வு நடத்திய ஆய்வு அறிக்கை வழங்கவும். |

நான் கோரியுள்ள மேற்கண்ட தகவல்களை உரிய கால அளவுக்குள் எனக்கு வழங்க வேண்டுகிறேன்.

இப்படிக்கு,

P. [signature]

(P. முத்துசாமி)

இடம் : ஈ.ரோடு

தேதி : 15-12-2022

இணைப்பு :

Indian Postal Order

No : 43F 303890

Date : 16.12.2022

Payable at Salem

Favouring Power Grid Corporation Of India Ltd